அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :105/2017

தேதி : 29/09/2017

## மும்பை ரயில் நிலைய விபத்து

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்
## நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்.

மும்பை நகர எல்பின்ஸ்டன் ரயில் நிலையத்தில் மின்கசிவு என்ற வதந்தியால் ரயில்நிலைய நடை மேம்பாலத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 27 பேர் மூச்சு திணறி பரிதாபமாக உயிரிழந்தது மற்றும் ஏராளமானோர் படுகாயம் அடைந்த இச்சம்பவம் சம்பவம் மிகுந்த வேதனை அளிக்கிறது.

பல லட்சம் கோடி ரூபாய் செலவில் புல்லட் ரயில் வருவதற்கான செயல் திட்டங்களை, மத்திய அரசின் ரயில்வே துறை நிறைவேற்றிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில், ரயில் நிலையங்களில் அடிப்படை வசதிகளை கூட அமைத்து தராததை இந்நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக பண்டிகைகாலங்களில் மட்டுமல்லாமல் மற்ற நேரங்களிலும் இதுபோன்ற அசம்பாவிதங்களை தவிர்ப்பதற்கு, தகுந்த பாதுகாப்பையும், வசதியையும் அதிகரித்திருக்க வேண்டும்.

கூட்ட நெரிசலில் சிக்கி பலியானவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு, படுகாயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத்தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com